# குடியரசுத் தலைவரின் பேச்சும் மக்களவை சபாநாயகருக்கு டி.ஆர்.பாலுவின் கடிதமும்!

அரசியல் சட்டம் செயல்படத் தொடங்கி 75 ஆண்டுகள் நிறைவடைந்துவிட்டன. இதற்கான விழாவினைப் பழைய நாடாளுமன்றத்தின் மய்ய மண்டபத்தில் இரு அவைகளின் கூட்டம் நவ. 26 ஆம் நாள் நடைபெற்றது.

அந்த நாடாளுமன்ற உறுப்பினர்களின் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு அரசியல் சட்டத்தின் சிறப்பை எடுத்துரைத்தார். நாளேடுகளில் வந்த செய்திகளைப் படித்துப் பார்த்த போது நமக்கு முழு நிறைவு அதனால் ஏற்படவில்லை.

அவர் சமதர்மத்தைப் பற்றியும் மதச்சார்பின்மைப் பற்றியும் குறிப்பிடவில்லை. ஆனால் ‘இந்திய அரசியல் அமைப்புச் சட்டம் உயிர்ப்புடன் விளங்கிடும் முற்போக்கு ஆவணம்’ என்று குறிப்பிட்டு இருக்கிறார்.

‘சமதர்மம்’ ‘மதச்சார்பின்மை’ என்கிற இரு சொற்கள் இல்லாமல் இந்திய அரசியலமைப்புச் சட்டம் எப்படி முற்போக்கு ஆகும்.? எப்படி அது உயிர்ப்புடன் இருப்பதாக் கருதப்படும் என்பது நமக்குப் புரியவில்லை.

முகப்புரையின் தொடக்கம் எப்படி இருக்கிறது? “இந்திய மக்களாகிய நாம், இந்திய நாட்டினை இறையாண்மையும் சமநலச் சமுதாயமும் சமயச் சார்பின்மையும் மக்களாட்சி முறையும் அமைந்ததொரு குடியரசாகத் நிறுவவும் அதன் குடிமக்கள் அனைவரும் ....” எனத் தொடங்குகிறது.

இந்த முகப்புரை 42ஆவது திருத்தம் கொண்டு வரப்பட்டபோது இதில் ‘Socialist’ (சமதர்மம்) ‘Secular’ (மதச்சார்பின்மை) ‘Integrity’ (ஒருமைப்பாடு) ஆகிய சொற்கள் 1976 ஆம் ஆண்டு சேர்க்கப்பட்டது.

அரசியல் சட்டம் இதுவரை 106 முறை திருத்தம் பெற்று இருக்கிறது. அரசு, அதன் தேவைக்கருதி திருத்தங்கைக் கொண்டு வந்தது. இந்த அரசியல் சட்டம் உருவாக்க அமைக்கப்பட்ட அரசியல் நிர்ணயசபை சுமார் மூன்றாண்டுகள் நடைபெற்றது. 2473 திருத்தங்கள் ஏற்கப்பட்டன.

அரசியல் சட்டத்தில் 345 பிரிவுகள் உள்ளன. 12 அட்ட வணைகள் உள்ளன. இவை ஆங்கிலம், இந்தி என இரு மொழிகளில் படிக்கக் கூடிய வகையில் வெளியிடப்பட்டு இருக்கின்றன. பெரும் காலச் செலவு, சட்ட அமைப்பு என மகத்தான ஏற்பாடுகள் அடங்கியுள்ள அதில் திருத்தங்கள் இந்த 75 ஆண்டுகளில் நடைபெற்றே இருக்கின்றன.

ஏற்கெனவே அரசியல் சட்டம் ஆங்கிலத்திலும் இந்தியிலும் உள்ளதானாலும் 75 ஆண்டு நிறைவு விழா நடாளுமன்றக் கூட்டுக் கூட்டத்தில் குடியரசுத் தலைவர் அரசியல் சட்டப் பிரதிகளை சமஸ்கிருதத்தில் வெளியிட்டு இருக்கிறார் என்று செய்திகள் வெளியாகி இருக்கின்றன..



சமஸ்கிருத மொழிக்கு - எந்த மாநிலத்திலும் மக்களால் பேசப்படாத மொழிக்கு குடியரசு த்தலைவர் வெளியிட ஆளும் பாஜ.க. அரசினர் அரசியல் சட்டத்தை அம் மொழியில் அச்சிட்டு பிரதிகளை வழங்கி இருக்கின்றனர் என்பது மட்டுமே அவர்களுக்கு முக்கியத்துவ மாகப்படுகிறது.

அரசியல் சட்டத்தில் உள்ள ‘சமதர்மம்’ ‘மதச்சார்பின்மை’ எனும் சொற்கள் இடம் பெற்றிருந்தும் அவற்றின் முக்கியத்துவத்தை அரசின் முகப்புரை கொள்கையைக் குடியரசுத்தலைவர் குறிப்பிட்டு பேசாதது மிகுந்த கண்டனத்திற்குரியதாகும்.

அரசமைப்பின் இலக்கணம் என்ன? இரண்டு அரசியல் வல்லுநர்கள் அதைப் பற்றிய விளக்கம் தந்துள்ளனர்.

(1)“ஒரு நாட்டின் வாழ்க்கை நடைபெறுவதற்குரிய சம்பிரதாயங்கள் மற்றும் சட்டங்களின் மொத்தத் தொகுப்பே அரசமைப்பு எனப்படும்.”

“ஒரு சமுதாயத்தை முறைப்படுத்தி ஒன்று படுத்தி ஆட்சி செய்யும் விதி முறைகளையும் கொள்கைகளையும் கொண்டுள்ள சட்டங்களின் மூலப்பொருளே அரசமைப்புச் சட்டமாகும்”

-அரசியல் வல்லுநரான பேராசிரியர் பிரெஸ்சு (Prof.Bryce)

(2) “ஒரு நாட்டின் குறிக்கோளையும், அந்நாட்டு அரசின் பல்வேறு அங்கங்களின் மூலமாகச் செயல்படுத்தப்படும் அதிகாரங் களையும் நெறிப்படுத்தும் விதிகளின் தொகுப்பையே அரசமைப்பு என்கிறோம்.”

- அரசியல் சட்டமேதை வியர்(Wheare)

(ஆதாரம்: மலர்க மாநில சுயாட்சி-கு.ச.ஆனந்தன்)

ஆக, இவ்விரு அரசியல் மேதைகளின்படி அரசியல் சட்டம் என்பது ஓர்அரசின் இலட்சியம் குறிக்கோளை விளக்கும் ஆவணம்-அந்த ஆவணத்தில் இருக்கிற ‘சமதர்மம்’, ‘மதச்சார்பின்மை’, என்கிற இரு சொற்களை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு கூறாதது ஏன்?

ஒன்றிய பா.ஜ.க. அரசுக்கு ‘சமதர்மம்’ பிடிக்காது. இப்போதைய ஒன்றிய அரசின் ஆட்சி மதவாதம் பேசும் கட்சி. அக் கட்சிக்கு ‘மதச்சார்பின்மை’யை வற்புறுத்த முடியாது. பா.ஜ.க.வின் கொள்கைகளுக்கு எதிராக குடியரசுத் தலைவர் அந்த இரு சொற்களையும் எப்படி இணைத்து உரையில் நாட்டு மக்களுக்கு எடுத்து கூறுவார்? இங்கு அரசின் கொள்கை ‘நடுநிலை சார்ந்து’ குடியரசுத்தலைவர் இல்லை. பா.ஜ.க.வின் குடியரசுத்தலைவர் என்பதையே அவர் மெய்பித்து இருக்கிறார்.

இப்படிப்பட்டவர் ‘சமதர்மம் மதச்சார்பின்மை பற்றி எப்படி முழங்குவார். என்றாலும் அரசியல் சட்டத்தில் உள்ளக் கொள்கையை எடுத்துச் சொல்லக் கூடிய இந்தியாவின் முதல் குடி மகள் அவர். அவர் அதை மறைத்து உரையாற்றியது சரியானது இல்லை.

ஆகவேதான், இந்திய அரசமைப்பு சட்டத் தினத்தன்று நடைபெற்ற 75-ஆவது ஆண்டு நிறைவு விழாவில் கலந்து கொண்ட மக்களவை தி.மு.கழக குழுத் தலைவர் டி.ஆர்.பாலு குடியரசுத்தலைவர் அவர் உரையில் இரு சொற்களைக் கூறாதது குறித்து குற்றஞ்சாட்டி இருக்கிறார்.

டி.ஆர்.பாலு குற்றம் சாட்டியதோடு நிற்கவில்லை. மக்களவைத் தலைவர் ஓம் பிர்லாவுக்கு ஒரு கடிதம் எழுதியிருக்கிறார். அந்தக் கடித விவரமாவது:-




**க.திருநாவுக்கரசு**
திராவிட இயக்க ஆய்வாளர்


தேசத்தின் அனைத்து குடிமக்களுக்கும் அரசமைப்புச் சட்டத்தின் மதிப்புகளைப் பரப்பும் நோக்கத்துடன் ஆற்றப்படும் குடியரசுத்தலைவரின் உரையானது தனித்துவமான மற்றும் குறிப்பிட்டத்தக்க நிகழ்வாகும். இந்த உரையின் அம்சங்களை அனைத்துக் குடிமக்களும் புரிந்து கொள்வர்.

“ஒன்றிய அரசு ஒப்புதல் வழங்கியுள்ள குடியரசுத்தலைவரின் உரையில் அரசமைப்புச் சட்டத்தின் முக்கிய கூறுகளான ‘சோசலிசம்’, ‘மதச்சார்பற்ற’ ஆகிய வார்த்தைகள் குறிப்பிடாததை அறிஞர்களும் பொதுமக்களும் பரவலாகக் சுட்டிக் காட்டுகின்றனர்.

“குடியரசுத் தலைவரின் உரையைத் தெளிவுப் படுத்தும் விதமாக அதன் மீது விவாதத்திற்கு அனுமதிக்க வேண்டும் என்பது நாடளுமன்றத்தில் வரையறுக்கப்பட்டுள்ள நடைமுறை. எனவே மக்களவைக் கூட்டத் தொடரிலேயே குடியரசுத்தலைவரின் உரையைக் குறித்து விவாதிக்க அனுமதிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்”

டி.ஆர்.பாலு மிகச்சரியாக அரசியல் சட்டத்தின் கொள்கை சார்ந்த அணுகுமுறையை வெளிப்படுத்தி ஓம் பிர்லாவுக்கு கடிதம் எழுதி அதனை நாட்டு மக்களுக்கு வெளிப்படுத்தி இருக்கிறார். இது குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடத்த வேண்டும் என்று அந்தக் கடிதத்தில் கோரி இருக்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடி அரசியல் சட்டத்தை வேதம் போல நம்புவதாகப் பரப்புரை செய்வார். ஆனால் அந்தக் கொள்கைகளை வெளிப்படுத்த அவர் அரசில் குடியரசுத் தலைவராக உள்ளவர் தமது உரையில் கூறவிலை என்றால் அதற்கு என்ன பொருள்?

பா.ஜ.க.வின் கொள்கைகளைக் குடியரசுத் தலைவர் எதிரொ லிக்கிறார். அவர்கள் சமதர்மிகள் இல்லை. மதச்சார் பின்மையை ஏற்றுக் கொள்கிறவர்கள் இல்லை. அதனைத்தான் குடியரசுத்தலைவரும் செய்கிறார். குடியரசுத் தலைவர் ஆகியும் அவர் கட்சி அரசியலை விடவில்லை. அரசின் கொள்கையை வெளிப்படுத்த விரும்பவில்லை-என்பதைத்தானே அவரது நடவடிக்கை காட்டுகிறது.

இன்னும் நாம் சொல்ல விரும்புகின்றோம், அரசியல் சட்ட முகவுரையில் உள்ள ‘சமதர்மம்’, ‘மதச்சார்பின்மை’, என்ற வார்த்தைகளை நீக்க முடியாது என்று உச்சநீதிமன்றம் கடந்த நவ. 24 ஆம் தேதி தீர்ப்பளித்து இருக்கிறது.

காலங்கருதி உச்சநீதிமன்றம் வழங்கியத் தீர்ப்பு இதுவென்றும்-இது மதச்சார்பற்ற மதிப்பீடுகளின் நினைவூட்டல் ஆகும் என்றும் இந்து ஆங்கில நாளேடு நவ.27 ஆம் தேதி உச்சநீதிமன்றத் தீர்ப்பைப் பற்றி எழுதி இருக்கிறது.

குடியரசுத்தலைவர், பிரதமர் ஆகிய இருவர் அசியல் சட்ட பொறுப்பை வகிக்கிற முதல் இருவர் அல்லவா? மூன்றாமவர் உச்சநீதிமன்றத் தலைமை நீதிபதி வழங்கிய ‘நினைவூட்டல் தீர்ப்பு’ இருவரும் கவனங் கொள்ளவில்லையா? என்று நாட்டு மக்கள் கேட்கிறார்கள். ஆகவே டி.ஆர்.பாலு ஓம் பிர்லாவுக்கு எழுதிய கடிதத்தில் குறிப்பிட்டது போல இந்த நாடாளுமன்றக் கூட்டத் தொடரிலேயே அவ்விரு சொற்கள் குடியரசுத் தலைவரின் பேச்சில் இடம் பெறாதது விவாதிக்கத் தகுந்தது ஆகும் என்றே நாமும் சொல்கின்றோம்.

●

## இந்தியாவில் 811 பேருக்கு ஒரு மருத்துவர்

# டாக்டர்கள் எண்ணிக்கையில் தமிழகத்திற்கு 2-வது இடம்!

### ஒன்றிய அரசு தகவல்!

சென்னை, டிச.1-

இந்தியாவில் 811 பேருக்கு ஒரு மருத்துவர் இருக்கிறார் என்று ஒன்றிய அரசு தெரிவித்துள்ளது. மேலும் டாக்டர்கள் எண்ணிக்கையில் தமிழகத்திற்கு 2வது இடம் கிடைத்துள்ளது.

ஒன்றிய சுகா தாரத் துறை அமைச்சர் ஜே.பி. நட்டா நாடாளுமன் றத்தில் கேள்வி ஏன் ஒன்றுக்கு எழுத்து பூர்வ மாக அளித்த பதிலில் கூறியிருப்பதாவது:

811 பேருக்கு ஒரு டாக்டர் இந்தியாவில் மாநில மற்றும் தேசிய மருத்துவ கவுன்சிலில் மொத்தம் 13 லட்சத்து 86 ஆயிரத்து 145 டாக்டர்கள் பதிவு செய்திருக்கிறார்கள். அதில் 80 சத வீதம் பேர் மக்களுக்கு சேவையாற்றி வருகிறார்கள். ஆயுஷ் மருத்துவர்கள் 6 லட் சத்து 14 ஆயிரம் பேர் உள்ளனர்.

அதன்படி இந்தியாவில் 81 பேருக்கு ஒரு டாக்டர் இருக் கிறார். இது உலக சுகாதார நிறுவனம் கூறியுள்ள ஆயிரத் தில் ஒருவருக்கு டாக்டர் என்ற குறியீட்டை விட குறைவானது. எனவே டாக்டர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க மருத்துவக் கல்லூரிகளின் எண்ணிக்கையையும் மத்திய அரசு அதிகரித்து வருகிறது.

கடந்த 2014ஆம் ஆண்டு நாட்டில் மொத்தம் 387 மருத்துவக் கல்லூரிகள் இருந்தன. ஆனால் இப்போது 780 உள் ளன. இது 102 சதவீதம் அதிகம் ஆகும். அதேபோல் 2014ம் ஆண்டு நாட்டில் 51 ஆயிரத்து 348 மருத்துவ படிப்பு இடங் கள் இருந்தன. ஆனால் இப்போது இது 1 லட்சத்து 18 ஆயி த்து 137 ஆக உள்ளது. இது 130 சத வீதம் அதிகம் ஆகும்.

மேலும் முதுநிலை டாக்டர் படிப்புக்கு 2014ம் ஆண்டு 3 ஆயிரத்து 185 இடங்கள் இருந்தன. இப்போது 73 ஆயிரத்து 157 இடங்களாக அதிகரிக் கட்பட்டுள்ளன. இது 135 சதவீதம் அதிகம் ஆகும்.


தமிழகம் இரண்டாமிடம் டாக்டர்கள் எண்ணிக்கையில் நாட்டிலேயே மிக 8 அதிகமாக மராட்டிய மாநிலத்தில் 2 லட்சத்து 9 ஆயி ரத்து 540 பேர்உள்ளனர். அதற்கு அடுத்தபடியாக தமிழகம் 2வது இடத்தைப் பிடித்துள்ளது. இங்கு 1 லட்சத்து 49 ஆயிரத்து 399 டாக்டர்கள் உள்ளனர். 3ம் இடத்தில் கர்நாடகம் லட்சத்து 41 ஆயிரத்து 155 டாக்டர்கள் இருக்கிறார்கள். நாட்டிலேயே மிக குறை வாக மிசோராம் மாநிலத்தில் 156 டாக்டர்களும், நாகாலாந்தில் 166 டாக்டர்களும் உள்ளனர்.

மற்ற முக்கிய மாநிலங்களில் உள்ள டாக்டர்கள் எண் ணிக்கை விவரம் வருமாறு: ஆந்திரா 1,05,805, பீகார் 48,200, சத்தீஷ்கார் 10,962, டெல்லி 31,481, கோவா 4,720, குஜராத் 79,169, அரி யானா 15,714, இமாசல பிர தேசம் 7,296, ஜம்மு 18,720, ஜார்கண்ட் 8,544, மத்திய பிரதேசம் 49,730, ஒடிசா 53,446, ராஜஸ்தான் 49.049. கோளா 29,792, பஞ்சாப் 73,070, உத்தர பிரதேசம் 99,737, உத்தர காண்ட் 10,249, மேற்கு வங்காளம் 78,759, தெலுங்கானா - 26,411. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இந்த டாக்டர்கள் எண்ணிக்கை என்பது அந்தந்த மாநிலங்களில் உள்ள மருத்துவக் கவுன்சிலில் பதிவு செய்யப்பட்ட எண்ணிக்கை அடிப்படையில் கூறப்பட்டுள்ளது.



அயலக திராவிட முன்னேற்ற கழகம் குவைத் தளபதி பேரவை சார்பாக குவைத் முருகாப் கூடல் நகர் பாலிவுட் உணவகத்தில் கழகத்தின் 75 ஆம் ஆண்டு பவள விழா, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் கழக இளைஞரணிச் செயலாளர் பிறந்தநாள் விழா, தளபதிக்கு தளபதி உதயநிதி பாடல் வெளியீட்டு விழா,கழகத்தின் மூத்த முன்னோடிகளுக்கு விருது வழங்கும் விழா,2025 ஆம் ஆண்டுநாள்காட்டி வெளியீட்டு விழா,என ஐம்பெரும் விழாவாக நடைபெற்றது. அருவி கவிஞர் ஆனந்த ரவி வரவேற்றார். தலைமை ஒருங்கிணைப்பாளர் பட்டுக்கோட்டை என் சரவணன் தலைமை வகித்தார்.


மிசா பா.நாகலிங்கம் Ex.MLA
பொன்னேரி தொகுதி சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்
( 1967 - 1971 & 1971 - 1976 )
அண்ணாவின் தலைமையில் கலைஞரின் வழியில்
நெருக்கடி காலத்தில் நெருப்பு மலராய் வாழ்ந்து மறைந்திட்ட
நின் நினைவேந்தி
கழக தலைவர் தளபதி
அவர்களின் தலைமையில் என்றென்றும் கழகப் பணியாற்றுவோம்
நா.மோகன்ராஜ்
மீஞ்சூர் பேரூர் கழக முன்னாள் செயலாளர்
எம்.ருக்மணி மோகன்ராஜ்
தலைவர் - மீஞ்சூர் சிறப்புநிலை பேரூராட்சி
மீஞ்சூர் ஒன்றிய குழு முன்னாள் துணை பெருந்தலைவர்
திருவள்ளூர் கிழக்கு மாவட்ட தி.மு.க